(ஆ) குடியாத்தம் நகரில் போதுமான அளவு மின்சாரம் இல்லாமையால், இரண்டு பஞ்சாலைகளும், சில தொழில்களும் சரிவர நடக்காததால் 'லே-ஆப்' வாங்கும் நிலை இருப்பதால், தொழிலாளர் பாதிப்பு குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், குடியாத்தம் நகரில் போதுமான அளவு மின்சாரம் இல்லாத காரணத்தினல், நகரிலுள்ள இரண்டு பஞ்சாலைகளும் இதர சிறு தொழில்களும் வேலை நடைபெறுமல் தடைபட்டும், அரைகுறையாகவும் நடப்பதால் தொழிலாளர்கள் லே-ஆப் வாங்கும் நிலை ஏற்பட்டிருப்பதால் தொழிலும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே' பாசனக் கிணறுகளில் நல்ல நீர் வசதி இருப்பதால் விவசாயிகளின் மின் தேவை அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் 1,300 மெகா வாட்டாக இருந்த மின் தேவை இந்த ஆண்டு திடீரென்று எதிர் பாராத வகையில் 1,600 மெகா வாட்டாக உயர்ந்துள்ளது இந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக மாநிலம் முழுவதும் நிலநீர் மட்டம் உயர்ந்திருப்பதால் இறைவை நீர்ப்பாசனம் பெருமளவு அதிகரித்து ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட எல்லா பம்பு செட்டுகளும் இயங்குகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மின் தேவை அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு பொதுவாக உச்சவேளை மின் தேவை மிகவும் அதிகமாக இருப்பதாலும், பல துணை மின் நிலையங்களிலும் மின் அழுத்தம் குறைவாக உள்ளது.

பிப்ரவரி மாதம் 23-ம் தேதி வரையிலும் குடியாத்தம் துணை மின் நிலையத்தில் குறைந்த பட்ச மின் அழுத்தம் 8.6 கிலோ வோல்ட் ஆகவும் உயர்ந்த பட்ச மின் அழுத்தம் 12.0 கிலோ வோல்ட்டாகவும் இருந்தது. 23—2—1978- ல்குடியாத்தம் துணை மின் நிலையத்தில் உள்ள மின் மாற்றிகளில் மின் அழுத்தத்தினை சிறிது அதிகரித்து அமைக்கப்பட்டது. மேலும் 4,000 கே. வி. ஏ. ஆர். கெபாசிட்டர்களும் துணை மின் நிலையத்தில் நிறுவப் பெற்று மின் இணைப்புக் கொடுக்கப்பட்டன. இதனுல் குறைந்த பட்ச மின் அழுத்தம் 9.6 கிலோ வோல்ட்டாகவும் உயர்ந்த பட்ச மின் அழுத்தம் 12.0 கிலோ வோல்ட்டாகவும் உயர்ந்தது.

இதுமட்டுமல்லாமல் குடியாத்தம் நகருக்கு மின்சாரம் வழங்கும் மின் கம்பித் தொடரினை இரண்டாகப் பிரிக்கும் வேலை முடிவடைந்து விட்டது. விரைவில் அந்த இரண்டு தொடர்களுக்கும் தனித்தனியே மின்சாரம் வழங்கப்படும். மின் அழுத்தம்

மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட காலத் திட்டங்களுக்குகாக திருவலம் துணை மின் நிலையத்தில் 25 எம்.வி.ஏ.ஆர். "சிங்கரன்ஸ் கண்டன்சர்" நிறுவும் திட்டம் 1978-ம் ஆண்டு முடிவிற்குள் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக மின் அழுத்த நிலைமை இப் பகுதிகளில் பெருமளவில் சீர்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இரண்டு மாதத்திற்கு முன்னால் இருந்தே அந்த மில்களில் 'லோ டென்ஷன்'— மின் அழுத்தம் குறைவாகவே உள்ளது என்பதைப்பற்றி அரசுக்கு எழுதித் தந்திருக்கிறார்கள். நானும் 20 நாட்களுக்கு முன்னாலிருந்தே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர் களுக்கும், அதைப்போன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கும் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த மின் அழுத்தக் குறைவினால் இப்போது 3 ஷிப்டாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற மில்களில் இனி இரண்டு ஷிப்டுதான் நடத் தப்போகிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, உடனடியாக ஒரு வாரத்திற்குள்ளாக மின் அழுத்தம் சரியாகக் கிடைக்கவில்லை என்றால் இரண்டு ஷிப்டு நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தொழிலாளர் மத்தியிலே ஒரு போராட்ட உணர்வு ஏற்பட்டு, போராட்டத்திலே குதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கு அரசுதான் பொறுப்பு, அரசுதான் போரட்டத்தை தூண்டிவிடுகிறது என்று நான் சொல்லலாம் அல்லவா? ஆகவே ஒரு வாரத்திற்குள் சரியான மின் அழுத்தம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, லோ வோல்ட்டேஜ் என்பது உண்மை. ஆனால் அது ஒரு வாரத்தில் சரி செய்யப்படும் என்ற உறுதியினை அளிப்பதற்கில்லை. ஏனென்றால் அந்த 11 கே. வி. ஃபீடர்களைப் பொறுத்தவரையில் அதை இரண்டாகப் பிரிக்கவேண்டி இருக் கிறது. அதற்குரிய வேலைகள் நடந்து வருகின்றன. அதேபோல ரீஆக்டர்ஸ் பொருத்துவதற்கு 25 எம்.ஈ.ஆர். சிங்க்ரோனைஸ்ட் கண்டன்ஸர் வேண்டும். அதற்கு ஓரளவு காலத்தாழ்வு ஏற்பட் டிருந்தாலும் வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பு 8.6 கிலோ வாட் என்று இருந்தது 9.6 கிலோ வாட் என்கிற அளவுக்கு வந்திருக்கிறது. ஆகவே நிலைமை திருப்திகரமாக ஆகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.